(நண்பகல் 12-00)

(8) அரசினர் சட்ட முன் வடிவு.

தமிழ்நாடு 1975-ம் ஆண்டு, நிதி ஒதுக்க சட்ட முன் வடிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1975-ம் ஆண்டு, நிதி ஒதுக்க சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இச்சட்ட முன் வடிவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன் வடிவு அறிமுக படுத்தப்பட்டிருக்கிறது.

(9) 1975-76-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) நிதிக் கோரிக்கை எண் 20 — வேளாண்மை.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்:

“ நிதிக் கோரிக்கை எண் 20 - வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 32,63,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்.

THIRU B. VENKATASWAMY: Sir, to discuss the need to bring down the prices of chemical fertilisers, I move—

‘ That the allotment of Rs. 32,63,47,000 under Demand No. 20—Agriculture—be reduced by Rs. 100. ’

திரு. குழ. செல்லையா: தலைவரவர்களே, தாளடிப் பயிருக்குப் போதிய தண்ணீர் கிடைக்காததினால் தஞ்சை மாவட்டத்தில் விவசாயம் பாதிக்கப்படுவது குறித்து விவாதிக்க—

நிதிக் கோரிக்கை எண் 20 - வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 32,63,47.000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும். என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, விவசாய விளை பொருள்களுக்கு நியாய விலை வருடம் பூராவும் ஒரே மாதிரி கிடைக்க உத்தரவாதம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விவாதிக்க—.

நிதிக் கோரிக்கை எண் 20 - வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 32,63,47,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

THIRU J. JAMES : Sir, to discuss the necessity to start an Agricultural College in Uthakiri Fort in Kanyakumari District, I move—

"That the allotment of Rs. 32,63,47,000 under Demand No. 20—Agriculture be reduced by Rs. 100.

(ஆ) நிதிக் கோரிக்கை எண் 49 - வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்.—

" நிதிக் கோரிக்கை எண் 49 - வேளாண்மை குறித்த மூலதனச்செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 53,92,64,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

Thiru J. JAMES : Sir, to discuss policy, I move—

'That the allotment of Rs. 53,92,64,000 under Demand No. 49—Capital Outlay on Agriculture—be reduced by Rs. 100 '.

Dr. H. V. HANDE : Sir, to discuss the need to give farmers pesticides, fertilisers and water-supply at the right time, I move—

'That the allotment of Rs. 53,92,64,000 under Demand No. 49—Capital Outlay on Agriculture—be reduced by Rs. 100 '.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் விவாதத்திற்காக எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, நான் சொல்ல விரும்புகிற கருத்துக்கள்* எல்லாம் அச்சிடப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மூன்று நாட்களுக்கு முன்பே வழங்கப்பட்டுள்ளன.

*394-432 பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1975 மார்ச் 25] [திரு. சி. பா. ஆதித்தனர்]

பேரவையின் கவனத்திற்கு சொல்ல விரும்புகிறேன். இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதி நிலை அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளார்கள். அவர்கள் சொல்லியிருப்பது தமிழகத்தில் தற்போது 11 லட்சம் ஏக்கர் விளை நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. அதைப் படிப்படியாக விளை நிலங்களாக மாற்றவேண்டி அரசு பண்ணை நிறுவனம் "பார்ம்ஸ் கார்ப்பொரேஷன்" இந்த ஆண்டு அமைத்துள்ளோம்.

"இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்"

என்பது திருக்குறள்.

எனவே, தரிசு நிலங்களை விளை நிலங்களாக ஆக்கும் ஒரு புதிய முயற்சியை அரசு மேற்கொண்டிருக்கிறது. இதுவரை, புதுமுறை விவசாய நடைமுறைகளை (மாடர்ன் அக்ரிகல்சரல் டெக்னிக்ஸ்) விவசாயிகள் மத்தியில் பரப்பி பிரச்சாரம் செய்து கொண்டிருந்தோமே தவிர, அரசு நேரடியாக இந்தத் தொழிலில் ஈடுபடவில்லை. எனவே, இந்தப் புதிய முயற்சிக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் ஆதரவு கொடுப்பார்கள் என்று நம்புகிறேன். மற்றப் பிரச்சினைகளிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

4. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) துணை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்கு முழு நாள் ஒதுக்கப்படாதது குறித்து.

திரு பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, நம்முடைய விதி எண். 159 (2) -இன் கீழ் ஒரு ஒழுங்குப் பிரச்சனை எழுப்ப விரும்புகிறேன். இன்று நாம் துணை மானியக் கோரிக்கை மீது விவாதம் நடத்தியிருக்கிறோம். இதில் விதி என்ன சொல்கிறதென்றால்—

'The Speaker shall allot one or more days after the day allotted for such presentation for the discussion of and the voting on the demands for supplementary or additional expenditure'

என்று விதி இருக்கிறது. நம்முடைய சட்ட மன்ற விதிமுறைப்படி ஒரு நாள் அல்லது இரண்டு நாள் ஒதுக்க வேண்டும் என்றிருக்கிறது. ஆனால் இன்று அவ்வாறு முழு நாளை ஒதுக்காமல் இருப்பது நியாயமா? முழு நாள் ஒதுக்க வேண்டுமென்பதுதான் முறை. ஆகவே, பேரவைத் தலைவரவர்கள் இதற்கு ஆவன செய்ய வேண்டும் என்கிற ஒழுங்குப் பிரச்சனையை எழுப்புகிறேன்.